# இயல் - 2

## மூதுரை

# மூதுரை - ஆசிரியர்

## ஔவையார்

# ஔவையாரின் காலம்



# ஔவையார் - குறிப்பு

- ஔவை என்ற சொல்லின் பொருள்
- ஔவை என்பது மூதாட்டி அல்லது தவப்பெண் என்ற கருத்தை உடையது

# மூதுரை பொருள்

- **மூதுரை** ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல். பழமையான அறக்கருத்துகளைக் கொண்டிருப்பதால் இது மூதுரை (மூப்பு + உரை) என அழைக்கப்படுகிறது.

- இதற்கு வாக்குண்டாம் என்ற இன்னொரு பெயரும் உண்டு. இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் “வாக்குண்டாம்” என்று வழங்கப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது.



# ஔவையார்

பல்வேறு காலங்களில் ஔவையார் என்ற பெயரில் பல பெண்பாற் புலவர்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்று தமிழிலக்கியங்கள் கூறுகின்றன. அதனால், ஔவையார் என்ற பெயரில் எத்தனை பேர் வாழ்ந்தார்கள் என்று கூறுவதில் சிக்கல் ஏற்படுகிறது.

ஔவை என்ற சொல்லுக்கு மூதாட்டி அல்லது தவப்பெண் என்ற பொருளும் உண்டு. சங்ககாலத்தில் ஔவையார் என்ற தமிழ் மூதாட்டி வாழ்ந்த வரலாறு நமக்குக் கிடைத்துள்ளது. இவரால் 59 செய்யுள்கள் பாடப்பட்டுள்ளன. அவை குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு போன்ற சங்ககால நூல்களில் காணப்படுகின்றன.

பண்டைக் காலத்தில் பெண்கள் கல்வியறிவு பெற்றுச் சிறந்த அறிவுடன் திகழ்ந்திருந்தனர் என்பதற்கு ஔவையார் மிகச் சிறந்த சான்றாவார். மேலும், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை போன்ற நீதி நூல்களையும் அசதிக்கோவை, பந்தனந்தாதி, விநாயகர் அவல், ஔவைக் குறள் போன்ற நூல்களையும் ஔவையார் இயற்றியுள்ளார்.

# ஔவை எழுதிய நூல்கள்

ஔவையின் நான்கு நீதி நூல்கள்

| | | |
|---|---|---|
| ஆத்திசூடி | - | 109 ஒற்றை வரிப் பா |
| கொன்றை வேந்தன் | - | 91 ஒற்றை வரிப்பா |
| மூதுரை | - | 30 வெண்பாக்கள் |
| நல்வழி | - | 40 வெண்பாக்கள் |

# கொன்றை வேந்தன்






# பாடல் - பொருள்

- *அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்*
- *கடக்கக் கருதவும் வேண்டா-மடைத் தலையில்*
- *ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்*
- *வாடி இருக்குமாம் கொக்கு.*
-

பொருள்: நீர் பாயும் தலை மடையில் பல சிறு மீன்கள் ஓடிக் கொண்டிருந்தாலும், கொக்கு வாடியிருப்பதைப் போலக் காத்துக் கொண்டிருக்கும். எது வரை? தனக்குரிய பெரிய மீன் வரும் வரை.
அதைப் போலவே அறிஞர்களின் அடக்கமும். அதைக் கண்டு அவர்களை அலக்ஷியம் செய்து வென்று விட நினைக்கக்கூடாது.